பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 05 2024 **WEDNESDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த மாதம் 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே கல்குவாரியில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் விஸ்வநாத் சுரேஷ் உட்பட ஆறு பேர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த மாதம் 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த வரி வருவாய் ஆண்டுதோறும் 12 புள்ளி நான்கு சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டு வருவதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கூடுதல் கட்டணங்களை திருப்பி செலுத்திய பிறகு சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஏப்ரல் மாதத்தை பொறுத்தவரை ஒரு லட்சத்து 92 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது அதற்கு முந்தைய ஆண்டு இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் 15 புள்ளி ஐந்து சதவீதம் அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மக்களவை தேர்தலுக்கான இரண்டு கட்ட வாக்குப்பதிவின்போது பழங்குடியினரும் அதிக எண்ணிக்கையில் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளில் பழங்குடியினர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பலன் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கிரேட் நிக்கோபார் தீவை சேர்ந்த வாக்குச்சாவடியில் **'Shompen '** பழங்குடியினர் முதல் முறையாக வாக்களித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் வீண் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று மத்திய அரசின் விஞ்ஞான் பிரசார் அமைப்பின் முதுநிலை விஞ்ஞானி திரு த.வி.வெங்கடேஷ்வரன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>

காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே கல்குவாரியில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

குவாரிக்கு தேவையான வெடி மருந்துகளை லாரியிலிருந்து இறக்கும்போது இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்றவுடன் உரிய நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

தொழிலாளர் தினம் இன்று கொண்டாடப்பட்டது. இந்நாளையொட்டி, நாடு முழுவதும் தொழிலாளர்கள் பங்கேற்ற பேரணி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<<<>>>>>

ஆகாஷவாணியின் செய்திப்பிரிவு தலைவராக திருமதி **Maushumi Chakravarty** இன்று பொறுப்பேற்றுக்கொண்டார். இதுவரை இப்பொறுப்பினை வகித்த முதன்மை தலைமை இயக்குனர் திருமதி வசுதா குப்தா நேற்று பணி ஓய்வு பெற்றார்.

<<<<<<<>>>>>

காவிரி டெல்டா பகுதியான மயிலாடுதுறை மாவட்டத்தில் மிளகு சாகுபடி மூலம் விவசாயிகள் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டி வருகின்றனர்.

வீட்டு தோட்டத்திலும் மிளகு சாகுபடி செய்ய முடியும் என்று ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், விவசாயியுமான திரு வீரமணி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு தினங்களுக்கு வெயிலின் தாக்கம் இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நாமக்கல்லில் உள்ள உணவகம் ஒன்றில் சிக்கன் ரைஸ் சாப்பிட்ட இருவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதையடுத்து மாவட்ட ஆட்சியர் திருமதி உமா, விசாரணை நடத்தி உணவகத்திற்கு சீல் வைத்தார்.

-------

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதையடுத்து உரிய சோதனைகளுக்கு பிறகே சுற்றுலா வாகனங்கள் ஏற்காட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

-------------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே மே தினத்தை முன்னிட்டு, 20 மாவட்டங்களை சேர்ந்த 600-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இரண்டு மணிநேரம் சிலம்பம் சுற்றி சாதனை படைத்தனர்.

--------------------

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு ஆயிரத்து 400 கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<<>>>>>

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் விஸ்வநாத் சுரேஷ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், ஈரானின் **Hassani Seyedarsham**-ஐ வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஆகாஷ் - ஈரானின் **Ebadi Arman** –ஐ வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் பிரீத் மாலிக், வியட்நாமின் **Nguyen Duc Ngoc-**கை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு பிரிவில் **Jugnoo-** வும், மகளிர் பிரிவில் தமன்னா மற்றும் பிரியங்காவும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

ஆசிய கேரம் சாம்பியன் போட்டியில் இந்தியா, ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் பட்டம் வென்றது.

மாலத்தீவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா 3-0 என்ற ஆட்டக்கணக்கில் மாலத்தீவை வென்றது.

மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா 3-0 என்ற ஆட்டக்கணக்கில் இலங்கையை வென்றது.

------------

**Saudi Smash** டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Sutirtha Mukherjee** இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் அவர் 11-5, 11-6, 11-6 என்ற செட் கணக்கில், குரேஷியாவின் **'Hana Arapovic**-ஐ வென்றார்.

-------------------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டி அஜர்பைஜானின் **Baku** –வில் இன்று தொடங்குகிறது.

-----------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<<END>>>>>**